<u>மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், பெரியகுளம்.</u>

**முன்னிலை: திரு.K.ரகுநாத், B.A., B.L., L.L.M.,**
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
பெரியகுளம்.

**2026-ம் ஆண்டு ஜுலை மாதம் 04 ம் நாள் சனிக்கிழமை**

**<u>அ.வ. எண்.8/2025</u>**
**CNR No.TNTH0B-000002-2025**

1. தேனி மாவட்டம், பெரியகுளம் வட்டம், சருத்துப்பட்டி கிராமம், வடக்கு தெருவில் குடியிருக்கும் சுந்தர் என்ற சுந்தர்ராஜ் அவர்களின் மகன் இந்து, சுமார் 45 வயதுள்ள வைரமணி
2. தேனி மாவட்டம், பெரியகுளம் வட்டம், சருத்துப்பட்டி கிராமம், வடக்கு தெருவில் குடியிருக்கும் மூக்கன் அவர்களின் மகன் இந்து, சுமார் 52 வயதுள்ள சுந்தர்
3. தேனி மாவட்டம், பெரியகுளம் வட்டம், சருத்துப்பட்டி கிராமம், வடக்கு தெருவில் குடியிருக்கும் வைரத்தேவர் அவர்களின் மகன் இந்து, சுமார் 79 வயதுள்ள சுந்தர்ராஜ்

……. **வாதிகள்**

**// எதிராக //**

தேனி மாவட்டம், பெரியகுளம் வட்டம், எண்டிபுளி கிராமம், எ.புதுபட்டியில் குடியிருக்கும் சின்னாத்தேவர் அவர்களின் மகன் இந்து சுமார் 58 வயதுள்ள சி.குணசேகரன் ….. **பிரதிவாதி**

பிராது சொத்தில் வாதியின் அமைதியான சுவாதீன அனுபவத்திற்கு பிரதிவாதியோ, அவர் வகையறா ஆட்களோ, அவரது ஏஜெண்டுகளோ எவ்வித இடையூறும், தொந்தரவும், அக்கிரம பிரவேசமும் செய்யக் கூடாது என்று பிரதிவாதிகளுக்கு எதிராக நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் வழங்க கோரியும், வழக்கு செலவுத் தொகை கோரியும் இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**<u>வழக்குமூலம் எழுந்த நாள்:</u>** - 14.03.2001, 13.05.2024 ஆகிய தேதியில் தேனி மாவட்டம், பெரியகுளம் டவுன் தாமரைக்குளம் கிராமத்தில் உற்பத்தி.

**<u>வழக்கு தாக்கலான நாள்</u>** : 02.01.2025

**செலுத்தப்பட்ட நீதிமன்ற முத்திரைக் கட்டணம்**

| | | | |
|---|---|---|---|
| 1. | தாவா நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரத்திற்கு வழக்கின் மதிப்பு | Rs.1,000.00 | |
| | தமிழ்நாடு நீதிமன்ற முத்திரைக் கட்டணம் சட்டப்பிரிவு 27(c) ன்படி | | Rs.30.00 |
| | **மொத்தம்** | **Rs.1,000.00** | **Rs.30.00** |

இவ்வழக்கானது இந்நீதிமன்றத்தில் 10.01.2025 தேதியன்று அசல் வழக்கு எண்.8/2025 ஆக கோப்பிற்கு எடுக்கப்பட்டு, வாதிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு.M.இரத்தினகுமார் அவர்கள் முன்னிலையாகியும், பிரதிவாதி தரப்பில் அரசு வழக்கறிஞர் திரு.S.P.M.ஆரிஃப்ரஹ்மான் அவர்கள் முன்னிலையாகியும், இருந்த நிலையில், இருதரப்பு சாட்சி, சான்றாவணங்களை பரிசீலனை செய்தும், இருதரப்பு இதுநாள் வரையில் பரிசீலனையில் இருந்து வந்த இவ்வழக்கில் இன்று இந்நீதிமன்றம் கீழ்க்கண்டவாறு வழங்கும்:–

**தீர்ப்பாணை**

**I) இவ்வழக்கானது தள்ளுபடி செய்து தீர்ப்பாணை பிறப்பிக்கப்படுகிறது.**

**ii) செலவுத் தொகை இல்லை.**

**சொத்துவிவரம்**

தேனி மாவட்டம், பெரியகுளம் மாவட்டம், தாமரைக்குளம் கிராமம், புஞ்சை அயன் சர்வே எண். 2019 நிர் கட்டுபட்ட 0.50.00 ஏர்ஸ்க்கு ஏக்கர் 1 செண்டு 24 புஞ்சை நிலமாகும்.

**செலவுத்தொகை பட்டியல்** : தாக்கல் இல்லை

2026 ம் ஆண்டு ஜுலை மாதம் 04 ம் நாள் என் கையெழுத்தும் இந்நீதிமன்ற முத்திரையும் இடப்பட்டது.

RAGUNATH K

District Munsif,
Digitally signed by RAGUNATH K
Location: Periyakulam.
Dt.04.07.2026

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
பெரியகுளம்.